கொங்கு

ஆசிரியர்: புலவர் செ. இராசு

கார்த்திகை 2003] [நவம்பர் 1972

2 ... 1974



25 காசு

அறிவியல், வரலாற்றுத் திங்களிதழ்

கொங்கு

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ.

தேனடை 2 15—11—72 தேனீ 11

வணக்கம்

மாரிக்காலம் முடியும் தருவாயில் உள்ளது. வறட்சியின் மிரட்டலில் நிலை ஓரளவே தணிந்துள்ளது. தென் கிழக்குப் பருவக்காற்று அவ்வளவாக ஏமாற்றவில்லை.

தமிழ்நாட்டின் அரசியல் மேகங்களும் ஓரளவு கலைந்து அமைதி நிலவும் தருவாயில் உள்ளது. மீண்டும், மீண்டும் அமைதியைக் குலைத்து கடையடைப்புப்போன்ற இடர்களை ஏற்படுத்துவோர் முயற்சியில் எந்த நல்லெண்ணமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு நாள் கடையடைப்பாயினும், பொதுமக்களுக்கு எவ்வளவு இடர் ஏற்படுகிறதென்பதை, அவற்றைத் தூண்டிவிடும் மேல்நிலை அரசியல் வாதிகளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நாட்டில் அமைதி நிலவினாலேயே பள்ளிகளும், கல்லூரிகளும் திறக்க இயலும். "இளந்தளிர்கள்" கல்வி வளர்ச்சி தடைபடாது. அவ்வாறின்றி மீண்டும் மீண்டும் அமைதி குலைக்கும் வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவது, பொது மக்களையும், இளந்தளிர்களையும், திட்டமிட்டு வருத்தும் பெருங் குற்றத்திற்கு ஒப்பாகும்.

ஊராட்சி ஒன்றியங்களின் சமூகக் கல்வி நிதி, இந்த ஆண்டு, ஒவ்வொரு ஒன்றியங்களுக்கும் இருநூறு ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நாட்டுப் புறத்து மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அதிக முதலீடு செய்யும் வகையில் கொங்கு இதழுக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஆணையாளர்களையும், பெருந்தலைவர்களையும் வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

சதுப்பு நிலங்கள்

இரா. இராமசாமி M,Sc., F.M.S.
மாநிலக் கல்லூரி, ஆய்வு மாணாக்கன், நிலயியல் துறை

சதுப்பு நிலத்தின் இயல்பு

சதுப்பு நிலம் என்பது சேறுடன் கூடிய நீர் தேங்கிய தாழ்ந்த நிலப்பரப்பாகும். இந்நிலப்பரப்பின் அடி நில நீர்மட்டம் (Under Ground Water Table) தரை மட்டத்திற்கும் சிறிது மேலேயே இருப்பதால் நிலத்தடி நீர் கசிந்து வெளி வரும். இவ்வாறு வெளி வரும் நீர் தட்டையான சமவெளியாகிய சதுப்பு நிலத்தில் ஓடி வெளியேற இயலாது தேங்குகிறது. இதனால் சதுப்பு நிலங்கள் ஆழமற்ற சிறு ஏரிகள் போலக் காட்சியளிக்கும். மழைக் காலங்களில் சதுப்பு நிலங்களில் மிகுதியான நீர் தேங்குவதால், அவை ஆழமுடையதாகி ஏரிகளாகின்றன. கோடை காலங்களில் நீர் வற்றிப் போவதால் வறண்ட நிலங்களாக மாறிவிடுகின்றன. எனவே சதுப்பு நிலம் என்பது ஏரிக்கும் வறண்ட நிலத்திற்கும் இடைப்பட்டதாகும்.

சதுப்பு நிலங்களின் இயல்பை யொட்டி அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை சதுப்புச் சேற்று நிலங்கள், எக்காலத்திலும் நீரினுள் மூழ்கிக் கிடக்கும் சதுப்புக் கழி நிலங்கள், அழுகங்கள் (Bogs) எனப்படும். சதுப்புச் சேற்று நிலங்களில் நீர் வாழ் தாவரங்கள் மிகுதியாக வளரும். அவை பெரும்பாலும் சதுப்புக் கழி நிலங்களையோ அல்லது அழுகங்களையோ ஒட்டி அமைந்திருக்கும். அழுகங்களில் அழுகும் தாவரங்களே மிகுதியாகக் காணப்படும். பொதுவாக ஏரிக் கரையோரங்களில் இவை காணப்படும். சதுப்புக் கழி நிலங்களில் நீர் மிகுதியாக இருப்பதால் ஓரிரு நீர்வாழ் தாவர இனங்களே வளரும். மேற்கூறிய இம்மூன்று நிலங்களும் ஒரே இடத்திலும் அமைவுரும் சிற்சில சமயங்களில் நிலத்தின் இயல்புக்கேற்ப இம்மூன்றில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு மட்டும் அமைந்திருக்கும். பொதுவாக இம்மூன்றையும் ஒன்றிலிருந்து ஒன்றைத் துல்லியமாக வேறுபடுத்திக் காட்ட இயலாது. எனவே சதுப்பு நிலங்கள் என்பவை இவை அனைத்தையும்குறிக்கும்.

சதுப்பு நிலங்கள் தோன்றுமிடங்கள்

ஏறத்தாழச் சமமான நிலப்

பரப்புகளில் தான் சதுப்பு நிலங்கள் அமையும். இந்நிலங்களில் வளரும் தாவரங்கள் நீரின் ஓட்டத்தை தடைசெய்து கட்டுப்படுத்துகின்றன. மேலும் அவற்றின் வேர்களும், தண்டுகளும் சிக்கலாகப் பரவி வளர்ந்து நீரின் நேரான ஓட்டத்தை தடுத்து, அவற்றின் இடைவெளித் துளைகளினுள்ளே புகுந்து செல்லுமாறு செய்து நீர்த்தேக்கத்திற்கு அடிகோலுகின்றன.

சதுப்பு நிலங்கள் கடற்கரையை ஒட்டிய தாழ்ந்த நிலப்பரப்பிலும், ஆற்று வெள்ளச் சமவெளிகளிலும், பனியாறு படர்ந்த நிலப்பரப்பிலும் எக்காலத்திலும் உறைப்பனி வயப்பட்ட நிலப்பரப்புகளிலும் காணப்படும்.

கடற்கரையை ஒட்டிய தாழ்ந்த நிலங்களில் வேலி ஏற்றத்தால் கடல் நீர் உட்புகுதலாலும், பிறகு ஏற்படும் வேலி நீர் வடிதலால் அந்நிலப்பரப்புகள் ஈரமாகிச் சதுப்பு நிலமாகின்றன. இவை பெரும்பாலும் கழிமுகங்களிலுள்ள பள்ளத் தாக்குகளையே அடைத்துக் கொள்ளும். ஒரு பாங்கில் நதிப் புரமும் மறு பக்கம் கடலும் எதிர்க்கொள்ளும். இவற்றிலுள்ள கால்வாய்களின் வழியே கடல்நீர் உள்ளும் புறமும் செல்லும். உப்பு நீரின் கொடுமையைச் சகித்துக் கொள்ளும் தாவரங்களே அங்கு வளர இயலும்.

கடற்கரையை அடுத்த இத் தாழ்ந்த நிலப்பரப்புகளில் நன்னீர்ச் சதுப்பு நிலங்களும் அமைவதுண்டு. கடலிலிருந்து விடுபட்ட தாழ்ந்த சமவெளிகளும் பின்னர் ஆறு, மழை, ஊற்று ஆகியவற்றின் நன்னீரால் நிரம்பிச் சதுப்பு நிலங்களாகும். அட்லாண்டிக் (Atlantic) கடற்கரையிலுள்ள சதுப்பு நிலங்களும், குல்ப்பு (Gulf) கடற்கரையிலுள்ள சதுப்பு நிலங்களும், வடகரோலினு (North Carolina) ஒகேப்னேகி (Okefe-nokee) எவர்கிலாடி (everglades) ஆகிய இடங்களில் உள்ள சதுப்பு நிலங்களும் நமது நாட்டில் உள்ள சுந்தரவனமும் இவ்வாறு உண்டானவையாகும்.

அகன்ற தட்டையான சமவெளிகளில் அமைந்துள்ள வண்டல் மண்ணுடன் கூடிய கழிமுகங்களும், வெள்ளச் சமவெளிகளும் பல சதுப்பு நிலங்கள் உண்டாவதற்கு உரிய இடங்களாகும். தனித்து நின்றுவிட்ட கால்வாய்களும், இயற்கையான வெள்ள முகமேடுகளை அடுத்துள்ள பரந்த நிலங்களும் சதுப்பு நிலங்களும் தோற்றுவிக்கின்றன. பெரும்பாலும், வண்டல் படிந்த நிலங்களில் வளரும் தாவரங்கள் நீரை ஓடாமல் தடுத்துப் பரப்பிப் பள்ளங்கள் ஏதுமின்றியே நீரைத் தேங்கச் செய்வதால் இந்நிலப்பரப்புகள் உண்டாகின்றன.

பனியூழிக் காலத்தில், பனியாறுகளால் உண்டாக்கப்பட்ட

சிறிதும் பெரிதுமான பள்ளங்கள். பனியாறு கொண்டு வந்த படிவுகளினால் மூடப்பட்டுப் பின்னர் சதுப்பு நிலங்களாயின. எக்காலத்திலும் பனியுறைந்த பகுதிகளிலும் சதுப்பு நிலங்கள் ஏராளமாகக் காணப்படும். வேனிற் காலத்தில் உருகும்நீர் பனிக்கட்டியின் வழியே ஊடுருவிக் கீழே செல்லவும் முடியாது: அதே சமயத்தில் தட்டையான நிலப்பரப்பின் பக்கவாட்டிலும் பரவியும் ஓட இயலாது. ஆகையால் அஃது அவ்விடத்தில் தேங்க, துருவப் பகுதிகளில் வளரக்கூடிய பாசி, காளான் போன்ற தாவரங்கள் அதில் வளர்ந்து அவ்விடத்தைச் சதுப்பு நிலங்களாக்குகின்றன. குளிர் காலத்தில் அவை அப்படியே உறைந்துவிடுகின்றன. மீண்டும் கோடையில் தோன்றுகின்றன.

சதுப்பு நிலப் படிவுகள்

சதுப்பு நிலங்களில் உண்டாகும் படிவுகள் பெரும்பாலும் கரி கலந்த கூட்டுப் பொருள்களாலேயே ஆகின்றன. 'பீட்டு' என்னும் குறைந்த தரமுடைய நிலக்கரியே மிகுதியாக இருக்கும். பீட்டுக்கரி என்பது அரைகுறையாக மக்கி, அழிந்த தண்டு, வேர், இலை தழைகளாகிய தாவரப் பொருட்களாகும். நீர்வாழ் தாவரங்களான அல்லி, நீர்க்கோரை போன்ற செடிகள் ஆழமற்ற கரையோரங்களில் வளருகின்றன. பிறகு நீர் வற்ற வற்ற மையத்தை நோக்கிப் பரவலாக வளருகின்றன. அந்நிலையில் கரையோரங்களில் பட்டுப் போன தாவரங்கள் நுண்ணுயிரிகளால் தாக்கப்பட்டு அழுகி, மக்கி விடுகின்றன, இவ்வாறு அழுகும்போது உண்டாக்கப்படும் கழிவுப் பொருட்கள் நீரில் கலந்து நீரை நச்சுத் தன்மையுடையதாய்ச் செய்கின்றன. இதனால் நுண்ணுயிரிகள் சோர்வடைகின்றன. இன்னும் இக்கழிவுப் பொருட்கள் நீரில் கலந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தையும் மிஞ்சும்போது, நீரின் நச்சுத்தன்மை மிகுந்து நுண்ணுயிரிகள் கொல்லப்படுகின்றன. எனவே தாவரப் பொருட்கள் அரையும் குறையுமாக மக்கி மடிந்து இறுதியில் படிகின்றன. பீட்டுக்கரி நிலக்கரியைப்போல் எரிந்து சக்தியைக் கொடுக்க வல்லது. பெரும்பாலும் குறைந்த எரி திறனே தேவையுள்ள தொழில்களுக்கு இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

தட்டையான சமவெளிகளில் அமைந்துள்ள சதுப்பு நிலங்களினுள், ஓடும் நீர் பெரிய கற்களை இழுத்து வர இயலாது. எனவே இங்கு படியும் பெரும்பான்மையான படிவுகள் களிமண்ணும் குறுமணலும் ஆகும். நீரின் ஆழத்திற்கேற்றபடியும், படிவுகளின் அளவிற்கேற்றபடியும் படிவுகளின் அமைப்பு உருவாகும். அதனால் பீட்டுக்கரி, களிமண், குறுமணல் ஆகிய படிவுகள் தனித்தனியாக வரையறுக்

கப்படுகின்றன. சதுப்பு நிலப் படிவுகளைக் கொண்டு புவியியல் ஆய்வாளர்கள் ஒரு சதுப்பு நிலம் எவ்வாறு உண்டானது என்பதையும், அதன் வயது, பொருளாதார மதிப்பு ஆகிய வற்றையும் கூறிவிடுவர்.

சதுப்பு நிலத்தைச் சீர்திருத்தும் முறை

நன்னீர்ச் சதுப்பு நிலங்களிலுள்ள மிதமிஞ்சிய நீரைவடித்து விட அவை கழனிகளாக மாறி விடுகின்றன. ஆகையால் தேவையற்ற நீரை வடிக்க நீண்ட கால்வாய்கள் வெட்டி நீரை அருகிலுள்ள கடலுடன் கலக்கச் செய்கிறார்கள், அல்லது பக்கத்திலுள்ள பள்ளத்தில் விடுகிறார்கள். இதனால் நிலத்தடி நீர்மட்டம் பல வளைவுகளடைய நீர்மட்டம் குறைகிறது. நிலப் பரப்பிலுள்ள நீர் நிலத்தினுள் சென்று கால்வாய்களின் வழியே வெளியேறிவிடுகிறது, நெருங்கிய பல கால்வாய்களின் மூலம் இவ்விதம் செய்வது எளிதாகிறது. சிறு சதுப்பு நிலங்களில் திறந்த கால்வாய்களை வெட்டுவதைவிடப் பல குழாய்களை நிலத்தினுள் செலுத்தி நீரை உறிஞ்சி இறைத்து விடுகிறார்கள். இவ்வாறு சதுப்பு நிலங்களைக் கழனிகளாக மாற்றும் போது தேங்கிக் கிடந்த நீர் ஓடத்தொடங்கும். நீர் சிறிது ஓடத் தொடங்கியவுடன் ஓடும் நீரைச் சூழ்ந்துள்ள நிலையான நீரும் ஓட்டி இழுத்துச் செல்லப்படுவதால் விரைவில் நீர் மட்டம் குறைகிறது. அதனால் சதுப்பு நிலங்கள் சாகுபடிக்குத் தகுதியாகின்றன. சதுப்பு நிலங்களில் உள்ள மண்ணில் தாவரங்கள் மக்கியதால் உண்டான நைட்ரேட்டுகள் இருப்பதால் அவை உரமிக்க நிலங்களாகவும் அமைகின்றன. எனவே இத்தகைய நிலங்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். ஆனால் உவர் நீர்ச்சதுப்பு நிலங்கள் இவ்வளவு நன்மைகளைப் பயக்க இயலாது.

நமது நாட்டில் கங்கை பிரமபுத்திராக் கழிமுகங்களில் சுந்தரவனம் என்ற சதுப்பு நிலம் காணப்படுகிறது: இதனைச் சீர் திருத்தச் சணல் விளை நிலமாகும். கட்சுப் பகுதியிலுள்ள சதுப்பு நிலங்கள், திருவாங்கூர் உப்பங் கழிகளை அடுத்துக் காணப்படும் சதுப்பு நிலங்கள் பிச்சைவரம், குருச்சடித்தீவு ஆகிய இடங்களில் காணப்படும் சதுப்புநிலங்கள், வளரும் அறிவியல் நுணுக்கம் கொண்டு விரைவில் பயனுள்ள நிலங்களாக மாற்றப்படும்.

கொங்கு

ஆண்டுச் சந்தா	ரூ. 3
நான்காண்டுச் சந்தா	ரூ. 10
ஆயுள் கட்டணம்	ரூ. 100
கொங்கு (1972) முதல் தொகுதி	ரூ. 5

முகவரி:
நிர்வாகி, கொங்கு
26, இந்திரா நகர்
சென்னை-600020

கொங்கு முதல் தொகுதி 1971

மதிப்புரை

வே. தில்லைநாயகம்
பொதுநூலக இயக்குநர்

1 நூல்

1, ஒருவர் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிப்பதாய்,
2, ஒரு குறிப்பிட்ட உருவில் அடங்கியதாய்,
3. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்றதாய்,
4. வாசகர் கையாள வசதியாய்—அமைவது நூல்.

இந்த நூல் உருவாகக் காலம் பிடிக்கிறது. உருவானபின் சரிபார்க்கப்பட்டு, அச்சாகி, விநியோகிக்கப்பட்டு வாசகரிடையே வந்து சேர நூலாகிறது.

2 பருவ ஏடுகள்

21 ஏன்

ஒரு வார்த்தைக்கு மறுவார்த்தை பேசநேரமில்லாத காலத்தில் - அறிவியல் முன்னேற்றக் கருத்துகள் வேகமாகப் பரவிவரும் காலத்தில் - புதுக்கருத்தை உடனடியாகத் தெரிவிக்க உருவெடுத்ததுதான் பருவ ஏடுகள் (Periodicals).

22 இலக்கணம்

பருவம் தோறும் வெளிவரும் ஏடுகள் பருவ ஏடுகள் எனப் பெயர் பெற்றன. அது

1 குறிப்பிட்ட தலைப்பில் வெளிவர வேண்டும்,
2 குறிப்பிட்ட காலஇடைவெளியில் வெளிவர வேண்டும் ;
3 குறிப்பிட்ட பொருள்பற்றி செய்தி தரவேண்டும் ;
4 அப்போதுள்ள அறிவை மேலும் வளர்க்க முயல வேண்டும் ;

5 ஒரு இதழில் ஒரு கட்டுரையாவது, ஒரு ஆண்டில் ஒரு இதழாவது அறிவை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

23 வகை

அத்தகு ஏடுகளை மூவகையாகப் பிரிக்கலாம். அவை யாவன:

1 செய்தித்தாள்கள் (Newspapers) - அன்றாடம் உலகச் செய்திகளை தொகுத்துத் தருவனவாகும்.

2 செய்தி இதழ்கள் (Magazines) - செய்தியோடு பாமர ரஞ்சகமான துணுக்குகளையும், பிறவற்றையும் இணைத்துத் தருவனவாகும்.

3 அறிவேடுகள் (Learned Periodicals) - அறிவு வளர்க்கும் பணியில் பணிபுரியும் பல்வேறு துறைகள் பற்றி கருத்துத் தருவன வாகும்.

24 சான்று

அம்முறையிலே நாம் காணக் கிடைப்பது மிக அருகியனவே. அவைகளில் - குறிப்பிடத்தக்கவைகளில் - ஒன்று கொங்கு.

3 கொங்கு

31 பெயர்க்காரணம்

1 கொங்கு என்ற சொல்லுக்கு மலர், மகரந்தம், தேன், மணம், பொன் என்று பொருள் உண்டு. சுந்தரபாண்டியன் கல்வெட்டில் அளவை என்று பொருளிலும் பயன்பட்டுள்ளது.

2 கொங்கு என்றால் தேன். அறிவியலையும் வரலாற்றையும் தேன் போல வழங்கும் என்று வாழ்த்துரை நல்கியுள்ளார் பேராசிரியர் தூரன் அவர்கள்.

3 கொங்கு தமிழகத்தின் ஒரு பகுதி. அப்பகுதியின் வரலாறு சரியாகத் தொகுக்கப்பட்டால் தமிழக வரலாறு புதிய ஒளிபெறும். அம்முயற்சியில் ஈடுபடும் இதழ் கொங்கு என்று முதல் தலையங்கம் பேசுகிறது.

32 இலக்கணம்

முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள் செய்வித்தோன் தன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

(நன்னூல் 49)

என்ற பவணந்தியார் வாக்குக்கேற்ப இதழின் பெயர் மூலத்தாலும், ஆக்கியோனாலும், மிகுதி நிலையாலும், உள்ளடக்கத்தாலும், புரவலராலும், தன்மையாலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

4 குறிக்கோள்

41 இலட்சியம்

எடுத்துக்கொண்ட பணி செவ்வனே முடிந்து, பலன் தர வேண்டுமானால் முயற்சிக்கு ஒரு இலட்சியமும், வழிமுறையும், செயல் திட்டமும் வகுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

42 இலட்சிய வாசகம்

அம்முறையில் குறுந்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடலில் இவ்வரிகளை எடுத்து—

''சேவலங் கொடியோன் காப்ப
ஏமவைகல் எய்தின்றால் உலகே''---

முருகன் அருளால் உலகம் வாழ்கிறது என்ற இறை நம்பிக்கை இருவரிகளோடு ஆரம்பமாகிறது,

43 மாற்றம்

தொடர்ந்து காலத்திற்கேற்ப நல்லது காணும் போக்கில் இறையனாரின்

''கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழியோ''.

(குறுந்தொகை 2 : 8)

பாட்டின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டுள்ளது.

44 நோக்கம்

1 அறிவியல் கருத்துக்களைத் தமிழில் எடுத்துச் சொல்லல்-- புதிய கலைச்சொல்லாக்கம் - நல்ல பழஞ்சொற்களை விளக்கி நிலைவு செய்தல் - எளிமையான விளக்கம் - சிந்தனைக்கு உதவி.

2 கொங்கு நாட்டு வரலாற்று விளக்கம் - தமிழக வரலாற்றுக்கு புதுஒளியூட்ட இலக்கியம், கல்வெட்டுகள், தொல்லியல் முதலிய துறைகளை ஆய்தல். அம்முயற்சியில் எழும் கருத்துக்களை வெளியிடல்.

நல்ல நோக்கம், பயனுள்ள நோக்கம், பாராட்டப்பட வேண்டிய நோக்கம். அந்நோக்கம் வளர்க! வெல்க!

5 மதிப்பீடு

51 நோக்க நிறைவேற்றம்

எடுத்துக்கொண்ட நோக்கங்களை நிறைவேற்றும் முறையில் கட்டுரைகள் நல்ல வகையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை யாவன :

511 அறிவியல்

இராமசாமி - வைட்டமின்கள் (181-184)
இராமராசு - குளுகுளுவசதி (205-208)
மகாதேவன் - ஒளி ஒரு புதிர் (102-106)
மணிமேகலை - மலைகள் (20-23)

512 கலைச் சொல்லாக்கம்

நுட்பச் சொற்றொகை (185, 213, 254, 293)
நுட்பவியல் (6-7)

513 கொங்கு வரலாறு

இராசு - பவணந்தி (3-5)
புக்கானன் - ஆயிரத்தெண்ணூறில் தமிழகம் (18-19)

514 கொங்கு மண்டலப் பிரிவுகள்

1 தட்டய நாடு (71)
2 கிழங்கு நாடு (96)
3 வேங்கல நாடு (118)
4 மேல்கரை அரைய நாடு (175)
5 கீழ்கரை அரைய நாடு (199)
6 பூந்துறை நாடு (215)

515 கல்வெட்டு

1 பழமங்கலம் (14), வெள்ளோடு (60), தர்ரமங்கலம் (91), ஆனூர் (174) முதலிய இடங்களில் அகப்பட்ட கல்வெட்டுப் பாடல்கள் விளக்கம் பயனுள்ளது.

2 தமிழ்நாடு தொல் பொருளாய்வுத் துறை சூன் 1971ல் நடத்திய பயிற்சிப் பாசறைச் செய்தி பயனுள்ளது.

52 நுட்பச் சொற்றொகை

521 ஐந்து விதிகள்

தமிழ்மொழி உலகமொழியோடு ஒப்ப இருக்கவேண்டும். அது

உலகச் சிறப்பு மொழிச் சொற்களுக்கு இணையான சொற்களை உடனுக்குடன் ஆக்க அடிப்படை விதிகள் வேண்டும். அவை யாவன :

1 நேர்ச்சொல் (எ. க. pen-தூவல்)

2 வேர்ப்பொருட்சொல் (motor-இயங்கி)

3 சிறப்பியற்சொல் (train-புகைவண்டி)

4 ஒப்பொலிச்சொல் (bracket-பிறைக்கோடு)

5 முதலெழுத்துச்சொல் (radar-radio deteclim and ranging-கதிரியத் துப்பறிவும் வீச்சீடும்-கதுவீ)

[விவரம் தென்மொழி 1963 ஏப்ரல் இதழ் காண்க.]

522 பயன்படுவன

இம்முயற்சிக்கு கீழ்க்கண்ட நூல்கள் பயன்படும்.

1. The Science Dictionary by E.C. graham published by Jaico Publishing Co., Bombay *1971*, Rs. *10*/-

2. பாணினி இலக்கனம் - பின்பகுதி.

523 விமர்சனம்

நுட்பச் சொற்றொகை நல்ல முயற்சி தான்.

ஆனால் அச்சொற்கள் பல துறையைச் சார்ந்தனவாய் ஒரு அடிப்படைட் இல்லாமல் உள்ளது. அது மாற்றப்பட வேண்டும்.

எல்லாத் துறைக்கும் அடிப்படையான சொற்கள் முதலிய தொகுக்கப்பட வேண்டும். அடுத்து ஒவ்வொரு துறைச் சொற் களால் அமைக்கப்பட வேண்டும்.

இம்முயற்சி கூட்டு முயற்சியால் - மாதமொரு கூட்ட முயற்சி யாய் - நடந்தால் நல்ல பலனுண்டு.

53 எண் கொடுத்தல்

சில கட்டுரைகள் - சான்றாகச் சொன்னால் மணிமேகலை எழுதிய மலைகள் - எண் பிரிவுகள் பெற்று வந்துள்ளன.

இதில் - எண் கொடுப்பதில் - பொருள் இருப்பதாகத் தெரிய வில்லை. அது பொருள் பொதிந்ததாக இருந்தால் நலமாயிருக்கும்.

இவ்வேலைக்கு IS : *12-1964* guide for drafting indian standards (Rs. *4·50*) என்ற நூல் பயனுள்ளதாயிருக்கும்.

54 இதழமைப்பு

பருவ இதழ்கள் எப்படி அமைக்கப்படவேண்டும் என்று இந்திய தர நிர்ணயக் கழகம் IS : *4-1963* guide for layout for

learned periodicals என்று ஒரு நூல் வெளியிட்டுள்ளது. அதைப் பார்த்துப் பயன் பெறலாம்.

55 சொற் குறிப்பு

தொகுதியில் இருக்கும் சிறப்புக் கருத்துக்களின் வேர்ச் சொற்கள் எனும் வரிசையில் - ஆக்கியோர், கட்டுரைத் தலைப்பு, முதலியவைகளை இணைத்துத் தரவேண்டும் நல்ல சொற் குறிப்பு.

அப்படியில்லை இதிலுள்ள சொற்குறிப்பு. மாற்றியமைக்க வேண்டும்.

6 பாராட்டு

1 இருக்கும் சங்கடங்களைத்தாண்டி முன்னேறி அறிவுப் பணியாற்றிவரும் கொங்கு பாராட்டுக்குரியது.

2 மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்க்கும் நல்ல பயன் தரும். ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க ஏற்றது.

3 அப்படிப் படித்தால்தான் அறிவு வளரும் ஆராய்ச்சி பெருகும்; நாடு முன்னேறும்; நாமும் நலமடையலாம். செய்வோமா ?

வாழ்த்து

அன்புடையீர்,

கொங்கு என்னும் பெயரிய இதழின் ஈராண்டு விழாவும் கொங்குப் பகுதியின் வரலாறு பற்றிய கருத்தரங்கும் நிகழ்வதறிந்து பெருமகிழ் வெய்தும்.

வரலாற்றுச் சிறப்புக்குச் சான்றுகள் தரும் நிலையில் கொங்குப் பகுதி திகழ்கின்றது. இவ்வுண்மையினை உலகறியச் செய்யும் முயற்சியினை மேற்கொண்டுள்ள கொங்கு வாககர் பேராயத்தினரைத் தமிழறியும் நல்லுலகம் நாளும் பாராட்டும். ஐயம் இல்லை.

கொங்கின்ற கொழுஞ் செல்வர் முதல் சென்னைச் செழுங்கலை நியமத்துத் துணைவேந்தர், நூலகத்துறை இயக்குநர், தமிழ்த் துறைத் தலைவர்கள், ஆய்வறிஞர்கள், அரசியல் முதுகொண்டர் முதலிய பல திறத்தாரும் பங்குபற்றும் இவ்விழா வீறுபெறும்.

கொங்கு மணம் எங்கும் பரவுக. வெல்க விழா.

இராம. மீனாட்சிசுந்தரம்
முதல்வர், V.S.S.C. அரசினர் கலைக்கல்லூரி
பூலாங்குறிச்சி, இராமநாதபுரம் மாவட்டம்

கிளிகள் இனம்
(PARROTS)

ந. மனோகர் B.Sc.
பச்சையப்பன் கல்லூரி

கிளி இனத்தில் மொத்தம் 316 வகைக் கிளிகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை வெப்ப நாடுகளில்தான் வாழுகின்றன. காலத்தால் 15 மில்லியன் ஆண்டுகட்கு முந்தைய கிளிகளின் தொல்லுயிர் எச்சங்கள் (Fossils of Parrots) பிரான்சு நாட்டில் கண்டு எடுக்கப்பட்டு இருப்பினும் அவற்றின் தோற்றம் ஆஸ்திரேலியப் பகுதியைச் சார்ந்ததாகும்.

புள் இனத்திற்கு, நமது கைகளுக்கு ஒப்பான உறுப்பு, அவற்றின் அலகுகளே! பறவைகளின் உணவுப் பழக்க ஒழுக்கங்களுக்கு ஏற்ப, அவைகளின் அலகுகள் வடிக்கப்பட்டுள்ளன. மனிதனால் சுத்தியல் கொண்டே உடைக்க வல்ல கடுமையான கொட்டைகளைச் சில கிளி வகைகள், எளிதில் தம் அலகினால் உடைக்கவல்லதாம். காக்கடூஸ் (Cockatoos) என்னும் ஒரு வகைக் கிளிகள் மனிதனுடைய விரலையே சற்றும் சிரமமின்றி கிள்ளி எடுக்கும் அளவிற்கு ஆற்றல் பெற்றவையாம்.

கிளிகள் தொற்றிப் படருங்கால் தம் அலகை மூன்றாவது காலாகப் பயன்படுத்திக் கொள்ளும் விசித்திரமான பழக்கம் கொண்டவை. கால்களின் உதவியாலோ அல்லது பயன்படுத்தியோ உணவை வாயினுள் திணிக்கும் ஒரே பறவை இனம் கிளி இனமே! கிளிகளும் மனிதர்களைப் போல இடக்கை அல்லது வலக்கைப் பழக்கம் கொண்டவையாம். பெரும்பாலும் மரங்களிலேயே வசிக்கின்றன.

நாக்குகளின் இருவகை உருவ அமைப்புகளுக்கு ஏற்ப கிளிகளை இரு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவதாக, நுனி தட்டையான நாக்கைக் கொண்ட பறவைகள். இவைகள் கொட்டைகள், மலர்மொட்டுகள் முதலியவற்றை உணவாகக் கொள்ளுவன. இரண்டாவதாக ஈரமான தூரிகை போன்ற (Brush like) நாக்கு கொண்ட பறவைகள். இவை, தேன், பழச்சாறு முதலியவைகளை உணவாகக் கொள்ளுகின்றன. தேன் உண்டு வாழும் பறவைகள் தங்கள் குழல்போலும் நாக்கினால் தேனை உறிஞ்சிப் பருகுதலைப் போலன்றி, கிளிகள், மலர்களை கசக்கிச் சாற்றை நக்கும்.

ஆஸ்திரேலியாவில் நெச்டர் நோடாபிலிசு (Nestor notabilis) என்னும் ஒருவகைக் கிளிகள் வாழ்கின்றன. இவற்றைப்

பற்றிய உண்மை நம்மைத் திடுக்கிடச் செய்கின்றது. அவைகள் செம்மறி ஆடுகளைக் கொல்லும் கிளிகளாம். சாதாரணமாகக் கோடையில் தேன் உண்டு வாழும் இக்கிளிகள், அவ்வுணவுக்குப் பஞ்சம் நேருகையில் செம்மறியாட்டின் தோலை ஊடுருவிக் கிழித்து அவற்றின் சிறுநீரகங்களை (Kidnees) உண்டு வாழுகின்றன. நியூசிலாந்தின் ஆந்தைக் கிளிவகை (Owl Parrot), உணவாக வேர்த்தூவிகள், இலைகள், பழங்கள் முதலியவற்றை உட்கொள்கின்றன.

கிளி இனத்தில் சில கூடுகட்டியும், வேறு சில மரம், பாறை இவற்றின் பொந்துகளிலும் வசிக்கின்றன. பாராகீட்— Quaker parakeet (Myopsittacus monachus) என்னும் ஒருவகைக் கிளிகள், கூட்டாகச் சேர்ந்து ஒரு பெரிய கூட்டைக் கட்டும். அச்சமுதாய-ஒன்றியக் கூட்டினுள் தனித்தனி அறைகளில் இணை இணையாகப் பல கிளி இணைகள் வசிக்கும். உலோரிகுலசு (Loriculus) என்னும் ஒரு பிரிவு கிளிகள், உறங்கும்போது தன் கூட்டின் கிளையிலிருந்து தலைகீழாகத் தொங்குமாம்.

கிளி இணைகளுக்கு இடைப்பட்ட பாசமும், காதலும் பல ஆண்டுகளுக்கோ அல்லது வாழ்நாள் முழுமைக்கோ நீடித்து இருக்குமாம். இணைகள் ஒன்றுக்கொன்று ஆழ்ந்த நேயமுடையனவாகும். ஆண் கிளிகள், அடைகாக்கும் பருவத்தில் தன் பெண் இணைக்குத் துணை புரியுமாம். அடைகாக்கும் காலம் மூன்று வாரமாகும்.

உலகிலேயே ஆப்பிரிக்க நாட்டின் சிட்டாகசு எரித்தாக்கசு (Psittacus erithacus) என்னும் கிளிவகையே சிறந்த முறையில் பேசும் ஆற்றலைக் கொண்டனவாம். அடுத்த இடம் மத்திய அமேசான் நாட்டுப் பச்சைக் கிளிகளுக்கும், அதற்கு அடுத்த இடம் தென்அமெரிக்கா நாட்டுக் கிளிகளுக்கும் உரியனவாகும். நியூசிலாந்தின் ஆந்தைக்கிளி உலகின் பறக்க இயலாத கிளி இனமாகும். இவைகள் மரத்தின் உச்சியினின்று சறுக்குமாம். இதனின்று, முந்தைய கிளிவகைகள் சறுக்கும் வகையிலிருந்தே— அந்நிலையிலிருந்தே இன்று பறக்கும் அளவிற்கு வளர்ந்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கிளிகள் 50 முதல் 80 வருடங்கள் வரை உயிர் வாழும். கிளிகளால், சில வைரசு நோய்கள் மனிதர்க்குத் தொற்றிக் கொள்ளுமாம். கிளிக்காய்ச்சல் அல்லது சிட்டாகோசிசு (Psittaco is) எனும் வைரசு நோய் மனிதரைத் தாக்க வல்லது என்று தெரிய வந்ததும், கிளிகளை விரும்பி வளர்க்கும் கிளி நேயர்கள் அவைகளை வளர்ப்பதற்குச் சற்று தயங்குகின்றனர்.

உல்லாசப் பறவைகளைச் சுய மகிழ்ச்சிக்காகத் தளைஇட்டு கூண்டுக் கிளிகளாக்கி மகிழும் மனிதர்களிடமிருந்து காப்பதற்கு ஏற்ப கிளிக்காய்ச்சல் (அ) சிட்டாகோசிசு என்னும் வைரசு நோய் இயற்கையாகவே தோன்றியுள்ளது போலும்!

வாழ்த்துகின்றனர்

கொங்குஎனும் திங்களிதழ் கிடைக்கப் பெற்றேன்
எங்கள்தமிழ் வாழுமென னும் எண்ணம் கொண்டேன்
பொங்கிவழி கின்றதமிழ் உண்டேன் நாட்டில்
எங்குமிந்தக் கொங்குத்தேன் பாய்தல் வேண்டும்.

—கவிஞர் இறையரசன்

அன்புமிக்க இராசு,

தங்கள் முயற்சி திருவினையாகி வருவது குறித்துப் பெரிதும் அகமகிழ்கின்றேன். இடையில் பல நற்கருத்துக்களைக் கண்டு உளம் நிறைந்தேன். 'கொங்கு' தன் பல வண்ணங்களை மாற்றி, மாற்றி ஒளி வீசுவதையும் கண்டு உவகை கொண்டேன். நல்லோர் பலரும் தங்களுக்கு உறுதுணையாகி வருவது குறித்தும் பெருமை கொள்கிறேன். வல்லாரும் வருவரென்னும் துணிவுடையேன். வாழ்க தங்கள் **'கொங்கு'**.

மா. பொன்னப்பன்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதை.

ஆராய்ச்சிப் பேரவை

உறுப்பினர் கூட்டம்

3-12-72 ஞாயிறு மாலை 6 மணி அளவில் ஆராய்ச்சிப் பேரவை உறுப்பினர் கூட்டம் அமைந்தகரை, காவல் நிலையத்திற்குப் பின்னால் அமைந்திருக்கும், அய்யாவு நாயுடு குடியிருப்பில், முனிரத்னம் தெரு, மனை 60இல், நடைபெறும்.

1. **ஆண்டு நிறைவு விழா**
2. **நூல் வெளியீடு**

பற்றி கலந்துரையாடல் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வருக.

க. ப. அறவாணன்
செயலாளர்

ஐயம் தெளிமின்

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். ஆவணி (ஆகச்டு) கொங்கு இதழில் 'கவுண்டர்' எனும் தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையைக் கண்டேன். அக்கட்டுரை ஆசிரியர் கூறியுள்ள காரணங்கள் சற்றும் முறையான ஆய்வின்பாற்பட்டதாக இல்லை என்றே தோன்றுகிறது.

'கவுடா', 'காவுண்டா' என்ற கன்னடச் சொற்களின் அடிப்படையில் கவுண்டர் எனும் தமிழ்ச் சொல் தோன்றியதாகக் கூறுவது வேடிக்கையாக உள்ளது. "பேரன் பாட்டனைப் பெற்றான்" என்பது போல் தலைகீழ் பாடமாகவன்றோ உள்ளது! 'சேட்' எனும் சொல்தான் 'செட்டி' என்று மருவியதாகக் கூறுவது எவ்வளவு நகைப்புக்கிடமானதோ அதேபோல்தான் இதுவும்.

தமிழில் வடமொழிக் கலப்பு ஓரளவு வலிந்து நிகழ்ந்தபின் தோன்றிய சிதைவு மொழிகளுள் ஒன்றே கன்னடமாகும். அப்படியிருக்கையில் கன்னடச் சொல்லே தமிழாக மாறியது என அவர் கூறுவது வேடிக்கையே.

கவுண்டர் என்போர் குறிப்பாக வேளாளரே யாவர்; வேளாண்மை தொழிலால் மட்டுமின்றி தாளாற்றும் பண்பினாலும் அவ்வாறு அழைக்கப்படுவோராவர். எனவே அவர்கள் ஊர்த் தலைவர்களாக தொன்றுதொட்டு இருந்து வருவதில் வியப்பொன்றுமில்லை. "கவுண்டர்களைப்பற்றிய பண்டைய செய்திகள், அவர்கள் கன்னடப் பகுதியிலிருந்தும் தொண்டை நாட்டிலிருந்தும் கொங்கு நாட்டில் குடியேறியவர் எனக் குறிக்கின்றன" என்கிறார் கட்டுரையாசிரியர். எந்தப் பண்டைய செய்திகள்? எதன் அடிப்படையில் இவ்வாறு கூறுகின்றார்?

நில அமைப்பில் கொங்குநாடு கன்னட நாட்டின் எல்லையில் உள்ளதால் மட்டுமே 'கவுண்டா' கன்னடச் சொல் என்பது தவறான முடிவாகும், 'கவுண்டர்' எனும் தூய தமிழ்ச் சொல்லே 'கவுட', 'காவுட' எனக் கன்னடத்தில் மருவியிருக்கக் கூடும் என்று உறுதியாகக் கொள்ள இடமுண்டு,

சி. இராமச்சந்திரன் M.B.BS.
சேலம்

கட்டுரையாசிரியர் பதில்

இன்று கொங்கு நாட்டில் உள்ள கவுண்டர் குடிப்பெரு மக்கள் அனைவரும் கன்னடப் பகுதியிலிருந்து வந்து இங்கு குடியேறியவர் என்ற கருத்து கட்டுரையில் இருக்குமானால் அது தவறு.

இன்றுள்ள கவுண்டர் குடிப் பெருமக்களைப்பற்றிய ஆராய்ச்சி அன்று எமது கட்டுரை. கவுண்டர் என்ற சொல்லின் முதல் பொருள் யாது? எவ்வாறு பட்டமாக அது மாறியது என்பதே அதன் நோக்கம்.

கவுண்டர் என்ற சொல்லுக்கு ஊராளி என்பதே பொருள் என்பது எமது கருத்து. அது குறித்து அன்பர்கள் வேறுபாடு இருப்பின் கூற வேண்டுகிறேன்.

வரலாற்றின் போக்கில் குடி வேறு, பட்டம் வேறு என்பதும், பட்டப் பெயர் குடிப் பெயராக மாறுவதும் உண்டு என்பது தெளிவு. பல இந்துக் குடிகள் 'சாகேப்' என்று பட்டம் கொண்டிருந்தனர். கருத்துத் தொடர்பால் ஏற்பட்டது இது.

இங்கிருந்த வேளாண் குடி மக்களும் குடியேறியோரும் ஊர்த் தலைமையால் அப் பட்டப் பெயரை ஏற்றனர் என்றும் பின்னர் அது குடிப் பெயராக மாறி யிருக்கக்கூடும் என்பதும் எமது ஐயம்,

மற்றுமொன்று நினைவில் கொள்ள வேண்டும். இன்றைய அரசியல் மாநிலப் பிரிவுகளைக் கொண்டு அன்றைய நாட்டுப் பிரிவுகளைக் கொள்வது மரபல்ல. அன்று கொங்கணம் வரை தமிழ் நிலவியது. அங்கு பாகதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது தவறல்ல. ஆதலின் அப்பெயர்த் தொடர்பு ஏற்பட்டது தவறு அல்ல.

சங்க காலத்தில் கவுண்டர் என்ற சொல் இருந்ததாகத் தெரிய வில்லை. ஆதலான் இது பின்னர் தோன்றிய பட்டம் என்றும், அதை ஊர்த் தலைமை ஏற்ற பெருங் குடியினர் பெற்றனர் என்றும் கொள்வது தவறாகாது,

ஆராய்ச்சியாளருக்கு உள்ள இடர்பாட்டுக்கு இதை ஒரு எடுத்துக் காட்டாகக் கூறலாம். சொல்லின் தோற்றமும், காலப் போக்கில் அதன் பொருளின் மாற்றமும் அறிய வரலாற்றுச் சொல்லகராதி இல்லாதது எவ்வளவு இடராக உள்ளது என்பது இதனால் தெளிவாகிறது.

கவுண்டர் குடிப் பெருமக்கள் ஒருகாலத்தில், ஊர்த் தலைவர் களாகத் திகழ்ந்த குடியினர் என்பதுவே எமது கருத்து. இது தவறு என அன்பர் சான்று கூறுவாராயின் ஏற்கத் தயங்கோம்.

பிரும்மமாராயர்

புலவர் குழந்தை 'கவுண்டர்' பற்றி என்ன சொன்னார்? அடுத்துவரும் இதழ்களில் காண்க.

—ஆசிரியர்

கலவை

30. 'பனாட்டு' என்பது ஒரு வகைத் தின்பண்டம். இலங்கையிலே இன்னும் செய்து வருகின்றார்கள். இனிப்பு வகையைச் சேர்ந்தது. பனம்பழத்தின் சுவையே அதில் விஞ்சி நிற்கின்றது. பனை + ஆட்டு— பனாட்டு என்றாகும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அந்த இலக்கியப் பண்டம் இன்று தமிழ்நாட்டில் இல்லை.

31. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் தலைவராக மீண்டும் நிக்சன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அவருடைய கட்சி அந்த அளவு வெற்றி பெறவில்லை. நேரடித் தேர்தலின் விளைவு அது. நமது ஊராட்சி மன்றத் தேர்தலில்கூட இதே முறைதான் பின்பற்றப்படுகிறது.

32. தீபாவளிப் பண்டிகையன்று திருவிளக்கு வைக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இல்லை. வடக்கே செல்லச் செல்ல, அது ஒளிவிழாவாகவே கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதம் கூம்பன்றுதான் திருவிளக்குகள் தமிழ் நாட்டில் வைக்கப்படுகின்றன. தீபாவளி மிக அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு வந்த பண்டிகையாகவே தோன்றுகிறது.

33. வெடிகுண்டுகள் இப்போது அஞ்சலிலேயே வரத் தொடங்கிவிட்டன. இதுவரை 35 கடிதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை இந்தியாவிலேயே செய்யப்பட்டவை தானும். இதுபோன்ற செய்திகள் நமக்குப் புதியவை.

34. கைரேகையிலிருந்து குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது போலக் காலடிகளையும் பயன்படுத்த முனைகின்றனர். இதற்கென சிறு பிளாஸ்டிக் மணி பதித்த தரைவிரிப்புகள் தயாரகின்றன. நடக்கும்போது கால்வழியே வெளிச்செல்லும், மின்னூட்டம் பெற்று மணிகள் காலடி உருவை நிறுத்தி வைக்கின்றன. அதிலிருந்து அடையாளம் காணலாம்.

35, பேனாவைக் குறிக்க தனித் தமிழில் 'தூவல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஊற்றிற்கு இரண்டு பணிகள். ஒன்று, உள்ளிருந்து நீர் ஊறி வருதல்: மற்றது நீரை வெளியே தூவித் தெளித்தல். 'தூவல்' என்ற சொல் பிற்பகுதியை விளக்குகிறது. ஆனால் பேனாவில், நீர் தொடர்ந்து வரும் தன்மையே விஞ்சி நிற்கின்றது. தெளித்தல் குறைவு, எனவே தூவல்' என்பதைவிட, வேறு சொல் தேவை.

36. திருவேங்கடவன் திருமுன் செல்ல மக்கள் வரிசை மிக

நீளமாக உள்ளது, வரிசையினர் காணும் வகையில், 'சீனிவாசர் திருமணக் கதைப் படங்கள் அழகாக எழுதி மாட்டி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதன் கீழே எழுதியுள்ள தமிழ் விளக்குக் குறிப்புகளில் பிழைகள் மலிந்துள்ளன. வரிசையில் நிற்கும் தமிழர்கள், அது பொருமல் திருத்த மறப்பட்டுள்ளது தெரிகின்றது. கோயில் வாரியம் அதைத் திருத்தி எழுத வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

37. திருமண அழைப்பிதழ்களில் மணமகளின் அடைமொழியாக 'sow' எனப் போடுகின்றனர். சௌபாக்கியவதி என்பதன் சுருக்கமாம் அது. sow என்றால் (female pig) பெண் பன்றி என்று ஆங்கிலத்தில் பொருள். பாவம் மணமகள்.

38. நவம்பர் 13இல் தொடங்கும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் ஒன்றியப் பகுதியான, மினிக்காய், அமின் தீவுகளின் பெயரை 'லட்சத்வீப்' என மாற்றும் சட்டம் வர இருக்கிறது. தீவு என்ற தமிழ்ச்சொல் 'த்வீப்' (தீபம்-விளக்கு) என இந்திக்கு மாறுகிறது. இதைத் தடுத்து நிறுத்துவோர் யாருளர்?

39. பொறியாளர்களின் கூட்டமைப்பில் தலையாயது "பொறியாளர்கள் கழகம் (இந்தியா)" (Institution of Engineers, India) அதில் மூன்று நிலைகள் உள்ளன, fellow, member, associate member என்பவை அவை. அரசாங்கப் பொறியாளர்கள் இந்தக் கழகத்தில் உறுப்பினராக இருந்தால், ஆண்டுக் கட்டணத்தில் ஒரு பகுதியை தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

40. இந்தியப் பல்கலைக் கழகத்தின் ஐந்தாவது கருத்தரங்கு இந்த ஆண்டு சென்னையில் சூன் முதல் வாரத்தில் நடைபெறும். பேராளர் கட்டணத்தைப் பத்திலிருந்து பதினைந்து ரூபாயாக்கி விட்டனர்.

——; ( ) :——

சலவை

இரா. கணேசன்

மின்னியல் விரிவுரையாளர், அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரி கிண்டி, சென்னை-25

15-9-72 கொங்கு இதழில் 'கலவை' ஆசிரியர் நம் மூளையைச் "சலவை" செய்ய முயல்கிறார்.

Graduands என்பதற்குக் கை யகர முதலில் (pocket oxford dictionary) பொருள் இல்லை என்பதால் அத்தகைய சொல்லே இல்லை எனப் பொருள்படஎழுதியுள்ளார் கலவைஆசிரியர்.

Graduand—one about to graduate ; a candidate for a degree என வெப்புசுடர் அகர முதலியில் (webster's third new international dictionary unabridged) உள்ளதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாதம் என்பது தமிழ்ச் சொல்லே எனப் பாவாணர் நிறுவி விட்டார். எனவே அதனை இனியும் வடசொல் லென ஒதுக்கித் தள்ளமாட்டோம். அவ்வாறே வட சொல்லோ என ஐயம் தோன்றும் சொற்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளுதல் கூடாது எனக் கலவை ஆசிரியர் குறிப்பிடுகிறார். நஞ்சு கலந்த உணவோ என்ற ஐயம் நேர்ந்தபோதும் நஞ்சு கலந்த உணவு என மெய்ப்பிக்கப்பட்டாலொழிய அதனைத் தள்ளுதல் கூடாது என்பதனை ஒக்கும் கலவை ஆசிரியர் கூற்று.

வடசொல்லோ என ஐயம் ஏற்படுமாயின் அச்சொல்லைத் தள்ளி வைக்க வேண்டியதே முறை. அன்றேல் அச்சொல் மக்களிடையே வழக்கு பெற்று விடுகிறது. பின்னர் அச்சொல் வடசொல் என நிறுவப்படும், போது அதன் வழக்கை யொழித்தல் பெரும்பாடாய் முடிகிறது. சான்றாக ஒன்று கூறுவேன். ''அகராதி'' என்னும் சொல்லை வழக்குக்குக் கொண்டு வந்து விட்டோம். அது வடசொல் என்று இன்று பாவாணர் கூறுகிறார். அகர முதலி. அகர வரிசை என்னும் சொற்களை வழக்குக்குக் கொண்டுவர அரும்பாடுபட வேண்டியுள்ளது. இதெல்லாம் இப்படிக் கிடைக்கப் 'பாக்கெட் டிக்சனரி' எனக் கையாளப் புகுந்த கலவை யாசிரியரின் துணிவைப் பாராட்ட வேண்டும் !

தமிழ்ச் சொல் இது, வட சொல் இது என இனம் கண்டு கொள்ள வழிவகை வகுத்துச் சொல்வதை விட்டு. வட சொல் லொன்று நிறுவப்பட்டாலொழிய எல்லாச் சொற்களையும் வழக்குக் கொண்டுவரவேண்டும் என இனியாவது கலவையாசிரியர் நம் மூளைகளைச் சலவை செய்ய முயல மாட்டார் என்றெண்ணுகிறேன்.

திரு. கணேசர், தமிழை நன்கு அறிந்த பொறியாளர் ஆவார். அவருடைய இரண்டு மின்னியல் நூல்கள் விரைவில் தமிழில் வெளிவர இருக்கின்றன. ''அறிவியல் தமிழாக்க முறைகள்'' என்ற அவரது நூலில் நல்ல தமிழ் எழுத எல்லா வழிகளையும் புலப்படுத்தியுள்ளார்கள். ''அறிவுத் தமிழ்ப் பணி மன்றம்'' என்ற அமைப்பின் தலைவர். பிழையைச் சுட்டிக் காட்டியமைக்கு கொங்கு தன் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

—ஆசிரியர்

மூலனூர், தாராபுரம்

16—11—1800 இன்று பத்து மலபார் மணிப் பயணம் சென்று மூலனூரை அடைந்தேன பாறை குறைவாகவும், மரங்கள் கூடியும் உள்ளன, இருந்தாலும் நேற்றைப் போலவே பயிரிடா நிலங்கள்தான். வரும் வழியில் இருப்புப் உருக்கும் உலை (சென்னிமலையில் கண்டதுபோல) ஒன்று பார்த்தேன் மூலனூரில் ஒரு கடைவீதி உள்ளதாக அரவக்குறிச்சியில் சொன்னார்கள். வந்து பார்த்தால் இல்லை. கர்னல் புல்லர்ட்டன் காலத்தில் அழிபட்டதை மீண்டும் கட்டவில்லைபோல் தெரிகிறது ஒரு கோயிலும், அதற்கான பிராமணா, நடனமாதர், இசைஞா அனைவரும் உள்ளனர்.

சில நாட்களாக காலநிலை இனிமையாக உள்ளது. காலைப் பொழுது இதமாக உள்ளது. பகலிலும் மாலையிலும் வெய்யிலாக உள்ளது; இருப்பினும் கடுமையாக இல்லை.

17—11—1800 நெடுந்தூரம் சென்று தாராபுரம் அடைந்தேன் சரியாகச் சொன்னால் தர்மபுரம். இங்கே ஒரு மண்கோட்டை உள்ளது. கோட்டையிலிருந்தோர் எதிர்ப்பின்றி கர்னல் புல்லர்ட்டனிடம் சரணடைந்து விட்டார்களாம். இருந்தாலும் போராட்டத்தைக் காட்டுவதற்காக, நுழைவாயிலின் அடியில் சிப்பாய்கள் சென்று தோண்டினார்களாம். அவர்களின் தலைக்குமேல் குதிரைப் படையின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன கதவு திறந்ததும் யாருக்கும் சேதமின்றி நமது பட்டாளம் அமைதியாக உள்ளே நுழைந்து கோட்டையைப் பிடித்ததாம்.

முன்பெல்லாம நகரம் பெரியதாக இருந்ததாம் இப்போதுதான் அழிபாட்டிலிருந்து மீண்டு பழைய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இரு ஹாகுடிஸ், இதைத் தன் தலைநகராமாக்கிக் (கச்சேரி) கொண்டார். புது நகரம் வளர்வதற்கு திட்டங்கள் தீட்டி வைத்துள்ளார். தெருக்கள் அகலமாகவும், நேராகவும் அமைந்துள்ளார் புதுவீடுகள் பல எழும்பிக் கொண்டேயிருக்கின்றன. உள்நாட்டிலிருப்பதால், இங்கு விளையும் தானியங்களுக்கு சந்தை கிடைப்பது அரிது.

18 முதல் 20—11—72 திரு. ஹாருடிஸ் அவர்களுடன் தங்கினேன். ஊக்கமுள்ள, புத்திசாலி இளைஞர். இங்கு தோன்றிய இடங்கை, வலங்கைச் சண்டைகளை நன்கு சமாளித்தார். மேஜர் மேக்லியட் ஆண்ட பகுதியிலும் திரு உருடிசின் பகுதியிலும் இணக்கமான ஆட்டி நடைபெறுகின்றன கடமையாற்றுவதில் இருவரும் போட்டி போடுகின்றனர். உள்ளூர் அதிகாரிகள் தம்மிடம் வரும் வழக்குகளைத் தீர்க்கும் வரை, கச்சேரியைவிட்டுச் செல்லக் கூடாதென இருவரும் தடை விதித்துள்ளனர்.

[இங்கு வீரராயன் பணம், புழங்கி வந்த எடை, அளவுகள், படி, வள்ளம் போன்ற முகத்தல் அளவுகள், குழி, மா, கண்டம் போன்ற நில அளவுகள், விளைச்சல், அவற்றின் மதிப்பு வரி, விவசாயிகளுக்குக் கிடைக்கும் லாபம் போன்ற புள்ளி விவரங்களை அடுக்கிக் கொண்டே போகிறார் அவற்றை விடுத்து மேலே செல்வோம்.]

(தொடரும்)

கொங்கு தொல்லெழுத்து வரிசை எண் 2/1972

நெருப்பூர் நடுகல்

அமைவு: தருமபுரி மாவட்டம், நெருப்பூர்.

மொழி: தமிழ்.

கண்டுபிடித்துப் படித்தவர்: புலவர் புது. பொ. வெங்கடராமன்,

வாசகம்:

ஸ்வஸ்த்தி ஶ்ரீ பன்றி நாட்டுக் குளப்பாடி ஊராளி நெநூர் அத்தாணியும், பகைகல பாட்டை பொரையனும் உள்ளாற்றில் நிரை மீட்டுத் தந்தையும் மகனும் பட்டுக் கல் பொறித்தார் அதசாசனைபூம அத்தாணிநனும் பூமன் மாதேவனும் இம்மூவோம்.

குறிப்பு: இதில் வரும் ஊராளி என்ற சொல், குறிப்பிடத்தக்கது.

சந்தாதாரர்களுக்கு

இதுவரை சந்தாவைப் புதுப்பிக்காத அன்பர்கள் உடன் தங்கள் சந்தாவை செலுத்தி 'கொங்கு' வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம்.

ஆய்வு மேடை

நறுந்துணர்

தூரங்கைக் . பன்னீர்செல்வன்

தனித் தமிழ் கவிதை நூல், 34 தலைப்புகள். இளஞ்சிறார் படித்தறிவதுடன் பாடி மகிழத்தக்கவையும் உண்டு. படித்த பெரியோர் எண்ணிக் களிக்கத்தக்கவையும் உண்டு. உறக்கம் கொண்ட தமிழர்கள் உயிர்பெற்றெழவும் பாக்களுண்டு. மடமை நீக்கி மெய்யறிவு பெறவும் பாக்களுண்டு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் பாடற்பகுதிகள் உள்ளன.

மரபுவழிக் கவிதைகள் ஒலிநயமிக்கு விளங்குகின்றன. இசையமைத்துப் பாட ஏற்றவையாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் தமிழுணர்வு பொங்கி வழிகின்றது.

காலம் அறிந்து மாறடா — நூல்
கல்லா துரைத்தல் ஊறடா;
ஞாலம் இணைந்து சேறடா; — ஒளி
ஞாயி றாக மாறடா!
சாதிப் பிரிவை நீக்கடா; — பொய்ச்
சமயச் சழக்கைப் போக்கடா;
ஓதி ஒருமை ஊக்கடா; — இன
உறவை நெஞ்சில் தேக்கடா!

போன்றன காலத்தை எதிர்கொண்டு நிற்குமென நம்பலாம்.

36 பக்கங்கள்; விலை 60 காசு.

கிடைக்குமிடம்:

கயற்கண்ணி பதிப்பகம்

தனித் தமிழ்க் குடில்

முநனை (அஞ்சல்), ஊமங்கலம் (வழி)

தென்னார்க்காடு மாவட்டம்

திருமணம்

கொடுமுடி - சி. முருகேசன் D.C.E.

சாலைப்புதூர் - மோகனம்பாள்

17 - 11 - 72 *வாழ்க மணமக்கள்!*

உங்கள் தேய்ந்த டயர்களுக்கு
ARC புத்துயிர் அளிக்கிறது.

ஸ்கூட்டர் டயர் முதல்
டிராக்டர் டயர் வரை எதுவா
யிருந்தாலும், எங்கள்
தொழிற்சாலையிலுள்ள
நிபுணர்களால் விஞ்ஞான
முறையில் சூப்பர் லோடி
மோல்டில் ரிட்ரெட் செய்து
தரப்படும். புதிய தோற்றம்
சிறந்த சேவை,
கூடுதலான மைல்கள்.

A.R.C. பாதுகாப்பின் சின்னம்.

தி ஆனைமலைஸ் ரிட்ரேடிங் கார்ப்பரேஷன்,
42, மவுண்ட்ரோடு, கிண்டி, சென்னை-32-போன்: 801200 & 802926

ஆசிரியர்: புலவர். செ. இராசு.
அச்சிட்டவர்: து. இராஜலட்சுமி ரேணுகா பிரிண்டர்ஸ், [சென்னை-20.
வெளியிட்டவர்: ச. பிரகதம்.
அலுவலகம்: 26, இந்திரா நகர், சென்னை-600020.